யுஎஸ்எயிட் மத்தியமாகாணத்தில் இளைஞர் தொழில்வாய்ப்பு மற்றும் திறன் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது

-----------------

கொழும்பு பெப்ரவரி 2- 2018

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தென்னாசிய மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிரதிஉதவி செயலாளர் டானியல் ரொசென்பிளம் கண்டியில் யூ லீட் அலுவலகத்தை இன்று திறந்துவைத்தார்.கண்டியின் யூ லீட் அலுவலகம் மத்திய மாகாணத்தில் இளைஞர்களிற்கான தொழில் வாய்ப்புகளை விஸ்தரிக்கும்.

யூ லீட் என்பது சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்காவின் முகவர் அமைப்பினால்( யுஎஸ்எயிட்) நிதி வழங்கப்பட்டு தொழில்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு, மத்தியமாகாணத்தின் வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் 2017 இல் உருவாக்கப்பட்ட1-8 பில்லியன் ரூபாய் திட்டமாகும்( 12 மில்லியன் அமெரிக்க டொலர்).இலங்கையில் சந்தையை அடிப்படையாக கொண்ட திறமை வாய்ந்த நெகிழ்ச்சிதன்மை மிக்க தொழிலாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.யூலீட் இளைஞர்களிற்கான தொழில்வாய்ப்புகள் மற்றும் சுய தொழில்வாய்ப்புகளிற்கு ஆதரவளிக்கின்றதுமேலும் இலக்குவைக்கப்பட்ட பிரிவுகளில் தொழில்பயிற்சிகள் மற்றும் பயிற்சி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றது.

இலங்கை அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை காண்பதற்கு சந்தையின் தேவைகளுடன் தொடர்புபட்ட வெற்றிகரமான வேலைவாய்ப்புகளிற்கான திறமைகளும் வாய்பபுகளும் இளைஞர்களிற்கு கிடைக்கவேண்டும் என ரொசென்பிளம் தெரிவித்தார்.அமெரிக்க அரசாங்கம் யூலீட் திட்டத்தின் ஊடாக இலங்கை அரசாங்கம் , இலங்கையின் வர்த்தக சம்மேளனம், வர்த்தக சமூகம் மற்றும் பிராந்தியத்தின் அரச தனியார் பயிற்சி நிறுவகங்களுடன் வெற்றிகரமான நீண்ட கால ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அதிகளவு இளைஞர் வேலைவாய்ப்பின்மையை கொண்டுள்ள மத்திய, சப்ரகமுவ தென் மற்றும் வடமாகாணங்களி;ல் யூ லீட் பணியாற்றி வருகின்றது.சம்மேளனத்தின் அலுவலகத்திற்குள்ள அமைந்துள்ள யூ லீட்டின் கண்டி அலுவலகம் மத்திய மாகாணத்தில் இளைஞர் தொழில்வாய்ப்பிற்கான தொழில் அபிவிருத்தி வாய்ப்புகள் மற்றும் இணைப்பு செயற்பாடுகளை உருவாக்குவதற்காக சம்மேளனத்தின் உறுப்பினர்கள் தனியார் மற்றும் அரச தொழில்பயிற்சி அமைப்புகளுடன் நெருக்கமாக பணியாற்றும்.

யுஎஸ்எயிட் அமெரிக்காவின் முக்கிய அபிவிருத்தி முகவர் அமைப்பு.1956 முதல் இலங்கை அரசாங்கத்திற்கு மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியாக அமெரிக்க அரசாங்கம் 2 பில்லியன் டொலரிற்கும் அதிகமான தொகையை வழங்கியுள்ளது.